மலையாளம் தனில் வாழும் தேவா
மனமதில் குடி கொண்ட முருகனின் இளையோனே

அளவில்லா மலை மீது அமர்ந்தவனே தேவா
பல நாளும் நான் செய்த பாபத்தை தீராயோ
முன்முடி உனக்காக பின் முடி எனக்காக
தலை தன்னிலே வைத்து நான் வந்தேனே

அமரேசா உன்னைக்காண அலைந்திடும் என்னை பாராய்
அழுதேனே உன்னைக் காண அழுதா நதி தன்னில்
எம்பெரும் பூமானே அம்பலத்தரசே நீ
அருள் புரிவாய் எந்தன் நிலை கண்டு நீ